# சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களம்
# எம்பிலிப்பிட்டி வலயம்

**தரம் - 4** **தமிழ்மொழி செயலட்டை**

வாரம் - 7 செயலட்டை - 7 ஜூன் மாதம் 2021

**பின்வரும் அறிவித்தல்கள் ஐந்தை அட்டைகளில் எழுதி வாசிக்கச் செய்வியுங்கள்**

கண்ட இடங்களில் குப்பைகளை இடுவதைத் தவிர்க்கவும்.

வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்.

பேருந்தில் பயணச்சீட்டின்றிப் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

வைத்தியசாலைக்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

பொருட்களை வாங்கும் போது உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி என்பவற்றைப் பார்த்து வாங்கவும்.

**பின்வரும் அறிவுறுத்தல்களைப்போன்று மேலும் மூன்று அறிவுறுத்தல்களை தேடி அதனை அட்டையில் எழுதி வாசிக்கச் செய்வியுங்கள்.**

இடி, மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டாம்.

நித்திரை கொள்ளும்போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம்.

______________________________________________

______________________________________________

______________________________________________

**தரப்பட்டுள்ள சொற்களை கொண்டு கீழ்வரும் கூற்றுக்களை பூரணப்படுத்துங்கள்.**

| | | |
|---|---|---|
| காலாவதியாகும் திகதி | கைப்பேசியைப் | இவ்வாசனம் |
| சட்ட நடவடிக்கை | தண்டப்பணம் | |

1. பொலித்தீன், பிளாஸ்திக் பொருட்களை கண்ட இடங்களில் வீசுவோர் மீது ...........................................எடுக்கப்படும்.
2. பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பயணச்சீட்டைப் பெறாவிட்டால் .......................... அறவிடப்படும்.
3. இடி, மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் .......................... பயன்படுத்த வேண்டாம்.
4. கர்ப்பிணித் தாய்மார்களுக்காக .................................. ஒதுக்கப்பட்டுள்ளது.
5. பொருட்களை வாங்கும் போது உற்பத்தித் திகதி, ..................................... என்பவற்றைப் பார்த்து வாங்கவும்.